தினமலர்
ஞாயிறு ■ ஜூலை 7, 2019 www.dina




பாளை., சாரதா கல்லூரியில் கர்ம யோகா தின விழா நடந்தது.

# சாரதா கல்லூரியில் கர்மயோகா தினவிழா

திருநெல்வேலி, ஜூலை 7–

பாளை., சாரதா கல்லூரியில் கர்ம யோகா தின விழா நடந்தது.

பாளை., சாரதா கல்லூரியில் நடந்த கர்ம யோகா தின விழாவிற்கு கல்லூரி செயலர் யதீஸ்வரி சரவணபவப்ரியா அம்பா ஆசி வழங்கினார். அவர் பேசுகையில், ''ஒரு செயலில் தங்களை மகிழ்ச்சியாக ஈடுபடுத்தி கொள்ள வேண்டும். மனதை பண்படுத்தி, எந்த எதிர்பார்ப்பும் இன்றி பிறருடைய நலனுக்காக வாழ்வது 'கர்மயோகம்' என்றார். 'தினசரி வாழ்வில் கர்மயோகா' என்ற தலைப்பில் உதவி பேராசிரியை சிவகலா பேசினார். மாணவி ஜெயஸ்ரீ , 'கர்மயோகா' குறித்தும், மாணவி திருவிளங்கசெல்வி, 'ஞானயோகா' குறித்தும், மாணவி ராகவி, 'ராஜ யோகா' குறித்தும், மாணவி மிருதுலா' பக்தி யோகா குறித்தும் பேசினர். மாணவிகள், பேராசிரியைகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.